EASTERN
UNIVERSITY, SRI LANKA
EXAMINATION BRANCH
19 JAN 2015
VANTHARUMOOLAI,
CHENKALADY.

# "INFLUENCE OF DRAVIDIAN'S ~~ART ON HINDU AND~~ BUDDHIST TEMPLES IN POLONNARUWA PERIOD"

By

SAINULABDEEN FASEEL
REGISTRATION NUMBER: EU/IS/2008/AC/209
INDEX NUMBER : CS3609

**DISSERTATION IS SUBMITTED FOR THE PARTICAL FULFILLMENT OF THE REQUIREMENT FOR THE DEGREE OF BACHELOR OF ARTS (SPECIAL) IN HISTORY IN THE ARTS & CULTURE, EASTERN UNIVERSITY, SRI LANKA.**

LIBRARY
06 MAR 2015
EASTERN UNIVERSITY, SRI LANKA

FAC353
Project Report
Library - EUSL

**DEPARMENT OF HISTORY**
**FACULTY OF ARTS AND CULTURE**
**EASTERN UNIVERSITY**
**SRI LANKA.**

**2014.**

353

PROCESSED
Main Library, EUSL

## முன்னுரை

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் வரலாற்றுத் துறையில் சிறப்புக் கற்கை நெறியை நிறைவு செய்யும் பொருட்டு "பொலன்னறுவையில் உள்ள இந்து, பௌத்த ஆலயங்களின் தென்னிந்தியக் கட்டடக் கலை மரபின் செல்வாக்கு" எனும் தலைப்பின் கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு நாட்டினுடைய வரலாற்றைத் தீர்மானிப்பதில் அதன் அமைவிடத்திற்கும் முக்கியதொரு பங்குண்டு. ஆயினும் இதனால் எல்லா பிராந்தியங்களுக்கும் பாரம்பரிய வரலாறு இருப்பதாக கூற முடியாது. இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் இலங்கைக்கு பாரம்பரிய வரலாறு, பண்பாடு என்பவற்றில் தனித்துவமான பண்புகள் உண்டு. தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று மரபினைக் கொண்டமைந்த நாடு என்ற வகையில் இலங்கைக்கென்று தனித்துவமான சிறப்புண்டு. இலங்கையினுடைய வரலாறு இந்திய வரலாற்று அம்சங்களோடு நெருங்கிய தொடர்புபட்டது. அண்மை நாடென்ற வகையில் இந்திய மரபுகளினையும் உள்ளடக்கிய வகையில் வரலாறு கட்டியமைக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை இலங்கையின் வட மத்திய மாகாணத்திலுள்ள ஒரு நகரமாகும். தற்பொழுது இது பொலன்னறுவை மாவட்டத்தின் தலை நகராக உள்ளது. எனினும் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை பண்டைய இலங்கையின் தலைநகரமாகப் பெயரும், புகழும் பெற்று விளங்கியது. இப்பிரதேசமானது வடக்கே அநுராதபுரத்தினையும், கிழக்கே திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களையும் தெற்கே அம்பாறையினையும், மேற்கே மாத்தளை மாவட்டத்தினையும் எல்லைகளாக கொண்டமைந்துள்ளது. அநுராதபுரத்திற்கு பாதுகாப்பு வழங்கும் ஒரு அரணாக இருந்த இந் நகரை சோழர் இலங்கையின் தலைநகராக தெரிவு செய்தனர். பின்னர் இந்நகரம் சிங்கள மன்னர் காலத்திலும் இலங்கையின் தலை நகரமாக சுமார் இரண்டே கால் நூற்றாண்டுகள் விளங்கியது.

இந் நகரைச் சுற்றி, பல பாரிய நீர்ப்பாசனக் குளங்கள் மன்னர்களால் கட்டப்பட்டுள்ளது. இவை பொலன்னறுவையில் வாழ்ந்த பெருந் தொகையான மக்களின் உணவுத் தேவைக்காகவும், சுற்றியுள்ள பரந்த பிரதேசத்தில் விவசாயம் செய்வதற்காகவும் பயன்பட்டன. சுமார் 1000 ஆண்டுகளுக்குப் பின்னரும் இக் குளங்கள் இன்னும் பயன்பாட்டில் உள்ளன. நகருக்கு அண்மித்ததாக இங்கே பல பாரிய பௌத்த விகாரைகளும், இந்து கோவில்களும் இருக்கின்றன.

பொலன்னறுவை வீழ்ச்சியின் பின்னர் பாழடைந்து காடடர்ந்து, மறக்கப்பட்டுக் கிடந்த இப்பண்டைய நகரின் அழிபாடுகள், 19ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் தொல்பொருள் ஆய்வாரள்களினால் வெளிக்கொனரப்பட்டது. அரண்மனைகள், மாளிகைகள், கோவில்கள், பௌத்த பிக்குகளுக்கான வசிப்பிடங்கள், மருத்துவமனைகள், பயணிகள் தங்குமிடங்கள் மற்றும் அலங்காரத் தடாகங்கள் முதலியவற்றின் இடிபாடுகள் நகரின் அக்கால வளத்துக்குச் சாட்சியாக உள்ளன.

அநுராதபுர நகரின் வீழ்ச்சியில் சோழர்களால் தலைநகராக்கப்பட்ட இந் நகரத்திலே, அக்காலத்தில் சோழர்களின் படை வீரர்கள், அலுவலர்கள் அவர்களது குடும்பத்தவர் எனப் பல தென்னிந்தியர்கள் வாழ்ந்து வந்தனர். இந்துக்களான இவர்களது தேவைக்காகக் கட்டப்பட்டனவே பொலன்னறுவையிலுள்ள இந்துக் கோவில்கள். இங்கே பத்து சிவன் கோவில்களும், ஐந்து வி'னு கோவில்களும், ஒரு காளி கோயிலுமாக மொத்தம் பதினாறு இந்துக் கோயில்கள் அகழ்வாராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் சோழர் காலத்தில் கட்டப்பட்டவை என்பதற்கில்லை. ஒன்றிரண்டு கோயில்கள் மட்டுமே அவ்வாறு கூறத்தக்கவை. பாண்டியர் காலத்திலும் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. கலிங்க மாகனின் காலத்திலும் இவற்றுட் சில கட்டப்பட்டிருக்கக் கூடும். எனக் கருதப்படுகிறது.

பதினாறு கோயில்களுக்கும் பெயர்கள் இருந்திருக்கும் எனினும் இவை அனைத்தும் அறியப்படவில்லை. இலங்கைத் தொல் பொருள் துறையினர் இவற்றை எண்கள் மூலம் அடையாளம் காண்கின்றனர். சிவ தேவாலயங்களுக்கு முதலாம் சிவ தேவாலயம், இரண்டாம் சிவ தேவாலயம் என்றவாறு பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் சோழர் காலத்தில் வானவன் மாதேவி ஈஸ்வரம் என்று அழைக்கப்பட்ட இரண்டாம் சிவ தேவாலயமே முழுமையாகப் பேணப்பட்ட நிலையில் உள்ளது. இது தவிர ஐந்தாம் சிவ தேவாலயமும் ஓரளவுக்கு நல்ல நிலையில் உள்ளது. ஏனையவற்றுள் பெரும்பாலானவை அடித்தளம் முதலான குறைந்தளவு தடயங்களையே கொண்டுள்ளன.

இங்கே கட்டப்பட்ட பெரும்பாலான இந்துக் கோயில்கள் அளவிற் சிறியன. இங்கே வாழ்ந்த இந்துக்களில் பலர் இவ்விடங்களில் நிரந்தரமான ஆர்வம் கொண்டவர்களாக இருந்திருக்க முடியாது அத்துடன் உள்ளூர் மக்களை மதம் மாற்றும் முயற்சியிலும் சோழர்கள் ஈடுபடவில்லை. இதனால் தமிழ் நாட்டில் கட்டப்பட்டது போன்ற பெரிய கோயில்கள் இலங்கையில் சோழர்களால் கட்டப்படவில்லை. சோழர்களுக்குப் பின் வந்த சிங்கள ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட பெரும்பாலான கட்டடங்கள் இத் திராவிடக்கட்டடக் கலைப் பாணியை ஒத்தவையாகவே காணப்பட்டன.

பொலன்னறுவை பற்றியும் அங்குள்ள ஆலயங்கள், கட்டடங்கள் தொடர்பாகவும் தனிப்பட்ட எந்த ஒரு ஆய்வுகளும் தமிழில் இது வரையில் வெளிவராத போதிலும் ஏனைய கலை அம்சங்களுடன் இணைந்ததாக பல ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளமையும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். அந்த வகையில் கா.இந்திரபாலா அவர்களின் திராவிடக் கட்டடக் கலை, எஸ். பத்மனாதன் அவர்களது இலங்கையில் இந்து ஆலயங்கள் இவற்றுடன் க.நவரத்தினம் அவர்களது இலங்கையிற் கலை வளர்ச்சி என்பவைகளும், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2008 ஆம் ஆண்டு நடை பெற்ற ஆய்வரங்கில் வெளியிடப்பட்ட "சோழப் பேரரசும் சமயப் பெருநெறிகளும்" என்ற சிறப்பு மலர் என்பவை இலங்கையில் கலை தொடர்பாக மட்டுமன்றி பொலன்னறுவை ஆலயங்கள் மற்றும்

திராவிடக்கட்டடக் கலை தொடர்பாகவும் விளக்குகின்ற இலக்கிய ஆதாரங்களாகக் காணப்படுகின்றன. இவற்றின் துணை கொண்டு பொலன்னறுவையில் காணப்படும் பண்டைய அழிபாட்டு எச்சங்களில் திராவிடக் கட்டடக் கலைப் பாணியில் அமைந்த ஆலயங்கள், அரண்மனைகள் என்பவற்றை அடையாளங் காணக் கூடியதாக உள்ளது.

இவ்வாறாக பொலன்னறுவையில் காணப்படும் கட்டடங்களில் திராவிட செல்வாக்கிற்கு உள்ளான ஆலயங்கள், அரண்மனைகளை அடையாளப்படுத்துவதாகவே இவ் ஆய்வு அமைந்துள்ளது. இவ் ஆய்வானது பல்கலைக்கழக மாணவர்களுக்கும் எதிர்காலத்தில் திராவிடக் கட்டடக் கலை தொடர்பாக ஆய்வு செய்பவர்களுக்கும் மூலாதாரமாக இருக்கும் என நம்புகின்றேன்.

## உள்ளடக்கம்


முன்னுரை

நன்றியுரை

ஆய்வுக் கருப் பொருள்

ஆய்வுப் பரப்பும் காலமும்

முன்னைய ஆய்வுகள்

ஆய்வு அணுகுமுறை

ஆய்வு மூலங்கள்

எதிர்நோக்கிய பிரச்சினைகள்

ஆய்வின் கட்டமைப்பு

**அத்தியாயம் - 01**

1. ஆய்வுப் பிரதேசம் - ஒரு அறிமுகம் 1 - 16

1.1 அமைவிடமும் நிருவாகப் பிரிவுகளும்

1.2 தரைத் தோற்றமும் காலநிலையும்

1.3 பொருளாதார நிலையும் தொழில்களும்

1.4 கல்வி

1.5 சமூகம்

1.6 சமயம்

1.7 கலைகள்

1.8 பெயருக்கான பின்னணி

1.8.1 பொலன்னறுவையின் பழைய பெயர்.

1.8.2 தலைநகரானமையும் சோழராட்சியும்

1.8.3 சோழருக்குப் பின் பொலன்னறுவைக் காலம்

1.8.4 பொலன்னறுவை வீழ்ச்சி

**அத்தியாயம் - 02**

2 திராவிடக் கட்டடக் கலை மரபின் தோற்றமும் வளர்ச்சியும் 17 -33

2.1 திராவிடர்

2.2 பல்லவர் காலக் கட்டடக் கலை

2.2.1 குடைவரைக் கோயில்கள்

2.2.2 செதுக்குத்தளிகள்/மலை தளிகள்

2.2.3 கற்றளிகள்

2.3 சோழர் காலக் கட்டடக் கலை

2.3.1 முதலாம் கட்டம்

2.3.2 இரண்டாம் கட்டம் - பெருவிமானங்கள்

2.3.3 மூன்றாம் கட்டம் - விமானக் கோயில்களிற் கோபுரங்கள்
2.3.4 சோழர் காலக் கட்டடக் கலையின் பொதுவான இயல்புகள்
2.4 பாண்டியர் காலக் கட்டடக் கலை வளர்ச்சி
2.5 விஜய நகரக்கால கட்டடக் கலை வளர்ச்சி
2.6 நாயக்கர் காலக் கட்டடக் கலை வளர்ச்சி

அத்தியாயம் - 03

3 இலங்கையில் திராவிடக்கட்டடக்கலை மரபின் தோற்றமும் வளர்ச்சியும். 34 - 54
3.1 இலங்கை - இந்தியப் பண்பாட்டு தொடர்பின் பின்னணி
3.2 பல்லவர் பாணி
3.2.1 நாலந்தா கெடிகே
3.2.2 உற்பலவண்ணன் கோயில்
3.3 பொலன்னறுவை தவிர்ந்த சோழர் கலைப்பாணியில் அமைந்த கட்டடங்கள்.
3.3.1 பதவியாவில் இரவிகுலமாணிக்க ஈஸ்வரமுடையார் கோயில்
3.3.2 பெரிய குளத்தில் ராஜராஜப் பெரும் பள்ளி
3.3.3 மாதோட்டத்து ராஜராஜேஸ்வரக் கோயில்
3.4 பாண்டியர் கட்டடக் கலைப்பாணி
3.4.1 திருகோணமலைக் கோணேஸ்வரர் கோயில்
3.4.2 திருக்கோவில்
3.4.3 யாப்பகுவ தந்ததாதுக் கோயில்
3.5 விஜயநகரக் கலைப்பாணி
3.5.1 அலவதுர ஆலயம்
3.5.2 கடலாதெனி ஆலயம்
3.5.3 லங்காதிலக
3.5.4 முன்னேஸ்வரம்
3.5.5 பரெண்டி கோயில்
3.6 நாயக்கர் கலைப்பாணி

அத்தியாயம் - 04

4 பொலன்னறுவையில் உள்ள இந்து, பௌத்த ஆலயங்களில் திராவிடக் கலைச் செல்வாக்கு. 55- 90
4.1 இந்து ஆலயங்களில் திராவிடக் கலைச் செல்வாக்கு.
4.1.1 முதலாவது சிவ தேவாலயம்
4.1.2 இரண்டாம் சிவாலயம்
4.1.3 மூன்றாம் சிவாலயம்
4.1.4 நான்காம் சிவாலயம்
4.1.5 ஐந்தாம் சிவாலயம்
4.1.6 ஆறாம் சிவாலயம்

4.1.7 ஏழாம் சிவாலயம்

4.1.8 அம்மன் கோயில்

4.1.9 இரண்டாம் விஷ்ணு கோயில்

4.1.10 மூன்றாம் விஷ்ணு கோயில்

4.1.11 நான்காம் விஷ்ணு கோயில்

4.1.12 ஐந்தாம் விஷ்ணு கோயில்

4.2 பௌத்த ஆலயங்களில் திராவிடக் கலைச் செல்வாக்கு

4.2.1 வட்டதாகய

4.2.2 ஹெட்டதாகய

4.2.3 கெடிகே வகைக் கட்டடங்கள்.

4.3 அரண்மனைகள்

4.3.1 ராஜ வைசா புஜங்க (அரச சபை மண்டபம்)

4.3.2 நிசங்கலதா மண்டபம்

4.3.3 குமார குளத்திற்குப் பக்கத்திலுள்ள உடை மாற்றும் கட்டடம்

தொகுப்புரை 91 - 95

உசாத்துணை நூல்கள்

பின்னிணைப்பு